# CHAPTER – 14

# வரலாற்றில் பூலாங்குறிச்சி வட்டெழுத்துக் கல்வெட்டு

**முனைவர் து. பாரதி**
M.A., M.Phil, B.Ed, B.Lit, PGDCA, PGDCM, SHGM, CGT.,
உதவிப்பேராசிரியர், (முதுகலை – வரலாற்று ஆய்வுத்துறை),
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி,
சிவகங்கை –630 561

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து சுமார் 25 கி.மீ. தூரத்திலும் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியிலிருந்து கிழக்கே சுமார் 8 கி.மீ தொலைவிலும் பூலாங்குறிச்சி அமைந்துள்ளது. ஐவகை நிலங்களுள் மலையும் மலையைச் சார்ந்த பகுதியினை குறிஞ்சி எனக் குறிப்பிடுகிறோம். இவ்வூருக்கு மேற்கே மலை அமைந்துள்ளது. இந்த மலை இவ்வூரின் பழமையைக் தெரிவிக்கின்றது. பொதுவாக மலையடிவாரங்களில் உருவாகின்ற ஊர்களுக்கும் குறிஞ்சி என்ற பெயரும் உண்டு.

**‘‘சின்னாங் குறிச்சிக் குறிஞ்சிக் கிழவர் சிறுமி தனை**

**முன்னங் குறிஞ்சியில் சென்று கல் யாணம் முயன்றவனே’’**[1]

என்கிறது குறிஞ்சி நிலம் பற்றி கந்தரலங்காரப் பாடல்.

## பூலாங்குறிச்சி பெயருக்கான காரணம்

காட்டில் அடர்ந்து வளர்ந்திருந்த பூலான் (புல் வகையைச் சார்ந்தது) செடிகள் அதிகமாக இருந்தது எனவும், இவைகளை அகற்றி இவ்வூர் உருவாக்கம் பெற்றது என்பதாலும் இவ்வூர் ‘‘**பூலான்குறிச்சி**’’ ஆயிற்று என்று கூறுகின்றனர்.[2] இங்ஙனம் செடிகளைத் தோண்டி அகற்றிய போது, கிடைத்த அம்மன் சிலையை இவ்வூர் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.[3] சங்க கால பாண்டியர்களின் கடலகப்பெரும்படைத் தலைவன் என்னும் கப்பற்படைத் தலைவன், புலத்தவன் என்பாரிடமிருந்து சிற்றியாற்றூர் கடய வயல் பகுதியையும், வெள்ளேற்றான் மங்கலத்தைச் சேர்ந்த வயலையும் வாங்கி பகுதியையும், வெள்ளேற்றான் மங்கலத்தைச் சேர்ந்த வயலையும் வாங்கி கொடையளித்திருக்கின்றான்.[4] இந்தக் கொடையை நல்கிய புலத்தமன் வாழ்ந்த இந்த குறிச்சி பகுதியே பின்னாளில் மருவி பூலாத்தான் குறிச்சி என்பது பூலாங்குறிச்சி என பெயர் மருவி விளங்கி வருவதாகவும் கருதப்படுகிறது.

பூலாங்குறிச்சிக்கு அருகில் உள்ள திருக்காளக்குடி மலையில் சமணர்கள் வாழ்ந்திருந்ததிற்கான சான்றுகள் அதிகமாகவே காணப்படுகின்றது. களப்பிரர்களின் ஆட்சி காலத்தில் சமண சமயம் இப்பகுதியில் பரவி இருந்ததை காண முடிகின்றது.

## சமுதாய நிலை

சங்க கால மக்களாகிய குறிஞ்சி நிலத்து மக்கள் வசித்த பகுதியாகவும், பின்னர், சங்க கால பாண்டியர்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக பூலாங்குறிச்சி தொடக்க காலம் முதல் இருந்து வந்திருக்கின்றது. களப்பிரர்கள் வருகையால் தமிழகத்தின் பிற பகுதிகளைப் போன்றே பூலாங்குறிச்சி பகுதிகளிலும் களப்பிரர்கள் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கினர். இதனை தமிழ்நாடு அரசு தொல்பொருள் அகழாய்வுத் துறையின் பூலாங்குறிச்சியில் களப்பரர்களது பூலாங்குறிச்சி கல்வெட்டினை[5] கண்டுபிடித்துள்ளனர். இக்கல்வெட்டின் காலம் கி.பி.442[6] எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. களப்பிரர் மன்னரான கோச்சேந்தன் கூற்றம் என்னும் மன்னரது பெயரிலேயே இக்கல்வெட்டு உள்ளது.[7] எனவே பூலாங்குறிச்சி பகுதி கோச்சேந்தன் என்ற களப்பரச் சிற்றரசரின் தலைமையிடமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. களப்பிரர்களிடமிருந்து முக்கால பாண்டியரான கடுங்கோன், பாண்டிய மண்டலத்தைக் கைப்பற்றிய நிகழ்வை வேள்விக்குடி செப்புப்பட்டயம், தளவாய்புரம் செப்புப்பட்டயங்கள், சான்றுகள் பகிர்கின்றன.[8] கி.பி. 7–ம் நூற்றாண்டில் சோழ மன்னரான பூவந்திச் சோழன் ஆட்சி காலத்தில் பாண்டிய மன்னர், நகரத்தார்களை பாண்டிய மண்டலத்தில் வாணிபம் செய்ய வைசியர் குலப் பெண்களுக்கு பெரும் துன்பம் ஏற்பட்டாலும் உயிரிலும் மேலான மானத்தை காப்பாற்ற சோழமண்டலம் காவரிப்பூம்பட்டியம் விட்டுக் கிளம்பி பாண்டிய மண்டலத்தில் நகரத்தார்கள் தங்களது குடியமர்வை ஏற்படுத்தினார்கள்.[9] பாண்டியமன்னரான சவுந்திர பாண்டியன், நகரத்தார் இனத்தவர்களை பிரான்மலைக்குக் கிழக்கும், வைகையாற்றுக்கு வடக்கும், வெள்ளாற்றுக்குத் தெற்கேயும், குடியிறுப்புகள் அமைக்கவும், வாணிபம் செய்யவும், வழிபாடு நடத்துவதற்கும் பாண்டிய மன்னன் உரிமை வழங்கினார்.[10] பிரான்மலைக்கு கிழக்கேயே பூலாங்குறிச்சியும் அமைந்துள்ளது. இங்கு ஏராளமான நகரத்தார்கள் பன்னெடுங்காலமாக செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

## பூலாங்குறிச்சி கல்வெட்டில் அறியப்படும் செய்தி

‘‘தாபதப் பள்ளியள் வசிதேவனாரும் கோட்டமும்[11] என கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. களப்பிரர்கள் இரு இந்துக் கோவில்களை அமைத்ததைப் பற்றி இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இதில் ஒன்று சமணக்கோவிலாகும். இது ஒல்லையூர்க் கூற்றத்து வேளகூரைச் சார்ந்த பச்சேறிச்சின் மலையின் மீதும் மேலும், (ஒல்லையூர் கூற்றம் என்பது திருமயம் வட்டம் ஒளியமங்கலம் பகுதியே). முத்தூற் கூற்றம் (அறந்தாங்கி மற்றும் திருவாடாணை பகுதி) ஆகிய பகுதிகளை களப்பிரர்களது ஆளுகைக்குட்பட்டிருந்தாக இக்கல்வெட்டு செய்தி ஆதாரப்பூர்வமாக தெரிவிக்கின்றது.

## பூலாங்குறிச்சி கல்வெட்டின் சிறப்பம்சம்

களப்பிர மன்னரான சேந்தன் கூற்றன காலத்திய பூலாங்குறிச்சி கல்வெட்டினை எழுதியவன் நரியங்காரி என்று அக்கல்வெட்டிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டானது

தமிழ்நாட்டில் பிராமிய மொழியிலிருந்து தமிழ் வட்டெழுட்துக்கள் தோன்றி வளர்ந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் எழுதப்பெற்றவையாகும்.[12] வட்டெழுட்துக்களின் தொன்மையான வரி வடிவங்களை பூலாங்குறிச்சி கல்வெட்டில் மட்டுமே காண முடிகின்றது.[13]

இக்கல்வெட்டின் காலம் கி.பி.5–ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். ஏனெனில் கி.பி.5–ம் நூற்றாண்டிற்கு பிறகு தான் பாண்டிய நாட்டில் வட்டெழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.[14] முதன் முதலாக பூலாங்குறிச்சிக் கல்வெட்டில்தான், வட்டெழுத்தாக எல்லா எழுத்துக்களும் மாறும் வடிவங்களை காண முடிகிறது. தொடக்கநிலை சாதாரண வட்டெழுத்துக் கல்வெட்டுக்களில், பூலாங்குறிச்சிக் கல்வெட்டு தவிர, பிறவற்றில், ஆண்டு குறிப்பிட்டு எழுதும் பழக்கம் காணப்பெறவில்லை.[15] சங்க காலம் தொட்டே பூலாங்குறிச்சி, குறிஞ்சி நிலத்து மக்கள் வாழ்ந்த பகுதிகளாகவும், கடையேழு வள்ளல்களில் ஒருவரான பாரி வள்ளல் ஆட்சியின் கீழும், கி.பி.250 முதல் கி.பி.575 வரை களப்பிரர் கட்டுப்பாட்டிலும் பூலாங்குறிச்சி இருந்து வந்துள்ளது. களப்பிரர்களின் காலத்தில் சமண சமயம் இப்பகுதியில் பரவியதோடு மட்டுமல்லாமல் சமணர்கள் கல் படுக்கைகளையும் இங்கு அமைத்திருக்கின்றனர். முற்கால பாண்டியர்கள் (கி.பி.570 முதல் கி.பி.966 முடிய) களப்பிரர்களிடமிருந்து இப்பகுதியினை மீண்டும் கைப்பற்றி, சிவ வழிபாட்டினை இங்கு கொண்டு வந்து, சைவ சமயத்தை எழுச்சிபெறச் செய்துள்ளனர். பூலாங்குறிச்சியில் காணப்படுகின்ற கல்வெட்டானது பிராமி மொழியிலிருந்து தமிழ் வட்டெழுத்துக்கள் தோன்றி வளர்ந்து கொண்டிருந்த காலமான கி.பி.4–ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். முதன்முதலாக மெய் எழுத்துக்களுக்கு புள்ளி வைக்கும் வழக்கத்தையும் தொடங்கி வைத்த கல்வெட்டாகவும் காணப்படுகிறது. இவ்வூர் மக்கள் அக்காலத்திலேயே கல்வி அறிவு பெற்றவர்களாகவும் இருந்திருக்கின்றனர். சீவக சிந்தாமணி என்ற நூலின் ஏட்டுச் சுவடுகளை உ.வெ.சுவாமிநாத ஐயர் இப்பகுதியிலேயே சேகரித்து உள்ளார் என்று தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். மொத்தத்தில் பூலாங்குறிச்சி தமிழக வரலாற்றில் மிகத் தொன்மையான இடத்தை பிடித்திருக்கின்றது.

அடிக்குறிப்புகள்

1) பழ.அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1986, பக்.79.
2) மேலது.
3) நடன.காசிநாதன், தமிழகம் அரப்பன் நாகரீகத் தமிழகம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் 2006,ரு–35.
4) து.ராஜாமுகமது, புதுக்கோட்டை மாவட்ட வரலாறு, தமிழ்நாடு அரசு பதிப்பகம், புதுக்கோட்டை, 1992, பக்–15.
5) நடன.காசிநாதன், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, தொல்லியல் கருத்தரங்கு 1983– பூலாங்குறிச்சி கல்வெட்டு.
6) மேலது.
7) மு.இராசசேகர தங்கமணி, பாண்டியர் வரலாறு பாகம்–1, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை 1978. பக் 252
8) து.பாரதி, நாடு போற்றும் நகரத்தார்கள், மனோரா பப்ளிக்கேஷன்ஸ், சென்னை, 2008. பக். 20

9) ச.மெய்யப்பன், நகரத்தார் கலைக்களஞ்சியம், மெய்யப்பன் தமிழ் ஆய்வகம், சிதம்பரம் 2003. பக் 303 10) மேலது.

11) நடன.காசிநாதன், கல்லெழுத்துக்கள், மணிவாசகர் பதிப்பகம் சிதம்பரம், 1989, பக்–172–182

12) எ.சுப்பராயலு, செ.இராசு, தமிழக் கல்வெட்டியலும் வரலாறும், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–2001–பக்:–19

13) R.Nagasamy, An Outstanding Epigraphical Discovery in Tamilnadu, 5th International Conference senior of Tamilnadu, Madurai. Vol.1, 2-67 to 2-71 Madras.

14) நடன.காசிநாதன், பூலாங்குறிச்சி கல்வெட்டு, தொல்லியல் கருத்தரங்கு ஓர் மறுபார்வை. பக்–157–165.

15) டாக்டர் . இராசு பவுன் துரை, மயன் அறிவியல் தொழில்நுட்பம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2004–பக்.29

16) சோமலை, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக் 478.